[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1984 மார்ச் 30

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் முழுமையான உத்தரவாதம் அளிப்பது மட்டுமல்ல, வட்டமேசை மாநாட்டை விரைவிலே கூட்டி, நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டும். இந்த நிலையை ஏற்படுத்த இந்திய அரசு எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த வகையிலே அங்குள்ள நிலைமைகளை அறிந்து, அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிற காரணத்தால் இந்த அவையை ஒத்திவைத்து மேலும் இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. அ. நகுமால்கான்: தலைவரவர்களே, இதுபற்றி ஒரு சிறு விளக்கம் கேட்க அனுமதிக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்த பிறகு சில சந்தர்ப்பங்களில் விளக்கம் கேட்பதற்கு இதற்கு முன்னால் அனுமதித் திருக்கிறீர்கள். அதைப் போன்று எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தீர்ப்பு அளித்த பின்னால் எந்தவிதமான விளக்கமும் கேட்க முடியாது, அனுமதிக்கவும் முடியாது, உட்காருங்கள்.

3. 106-வது விதியின்கீழ் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களது கோரிக்கைகள் குறித்த அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவரவர்களே, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினையும் சேர்ந்த மாணவர்கள் சார்பாக ஏழு மாணவர்கள் பிரதிநிதிகள் நேற்று என்னைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கைகள்:

(1) மொத்தம் உள்ள வேளாண்மை அலுவலர் பதவிகளில் 10 சதவீதத்திற்கு உதவி வேளாண்மை அலுவலர்களை துணை வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்வு அளிக்கலாம். அதற்கு மேல் பதவி உயர்வு அளிக்கக்கூடாது.

(2) 1983 டிசம்பர் வரை உதவி வேளாண்மை அலுவலர்களது பதவி உயர்வை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக தற்காலிகமாக உயர்த்தி அரசு ஆணை வழங்கியிருந்தது. ஆனால் 15 சதவீதத்திற்கு மேலாக துணை வேளாண்மை அலு

வலர்களாக பணி அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு 15 சதவீதத்திற்கும் அதிகமாக பணியில் அமர்த்தப்பட்டிருப்பதை உடனடியாக ஆய்ந்து, அதிகமாக உள்ளவர்களை மீண்டும் உதவி வேளாண்மை அலுவலர்களாக நியமித்து, புதிய வேளாண் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடல் வேண்டும்.

(3) பதவி உயர்வுக்கு தற்காலிகமாக 15 சதவீதம் அல்லது நிரந்தரமாக 10 சதவீதம் என்று கணக்கிடும்போது வேளாண்மை விரிவாக்கத் துறையிலுள்ள வேளாண்மை அலுவலர் பதவிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆராய்ச்சிக்காக நியமிக்கப்பட்ட பதவி இடங்களைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

மாணவர்கள் இந்த கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு கோரிக்கை 2-ஐப் பற்றி ஆய்ந்து அவர்கள் கேட்டுக் கொண்டவாறு மேல் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளேன் மாணவர்கள் பிரதிநிதிகள் எனது கருத்தை ஏற்று கொண்டு தங்களது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்புகள்

தஞ்சை, வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலை கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் பெ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. பெ. உத்திராதிபதி : தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம், வடபாதிமங்கலம் ஆரூரான் சர்க்கரை ஆலையின் கழிவுநீர் குடமுருட்டி ஆற்றில் கலப்பதால் கால்நடைகளிடையே நோய் பரவுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்படுத்தல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : (உரன்முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன்.